பல்கலைக்கழக மானியக்குழு நிதிநல்கையுடன்

## தேசியக் கருத்தரங்கம்

# இலக்கியத்தில் இறைக் கொள்கை

## ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு

15.02.2018



## முதுகலைத் தமிழ்த்துறை


## ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி

தேசியத் தர மதிப்பீட்டின் அடிப்படையில் 'முதல்' தர நிர்ணயம் பெற்றது
கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றது
DST FIST Supported College since 2015

பெரியகுளம் - 625601, தேனி மாவட்டம்.

# பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | ப. எண் |
|---|---|---|
| 1. | **விவிலியத்தில் தூய பவுலின் இறைக்கொள்கை**<br>முனைவர் அருட்சகோதரி லூ.சகாய லில்லி | 01 |
| 2. | **திருவிவிலிய கடித இலக்கியங்கள் காட்டும் 'அன்பு வழியது'**<br>முனைவர் அருணாதேவராஜ் இராஜேந்திரன் | 07 |
| 3. | **விவிலிய உவமைக் கதைகள் வெளிப்படுத்தும் இறைக்கொள்கைகள்**<br>செ. லிட்டில் ப்ளவர் | 13 |
| 4. | **புனித பவுலடியார் கூறும் இறைக்கொள்கைகள்**<br>செல்வி கா.சிரேஸ்எஸ்தர் | 17 |
| 5. | **காப்பிய இறைக்கொள்கையில் வளனார்**<br>அருட்சகோதரி. முனைவர் தி. நிர்மலா<br>அருட்சகோதரி. சி ஜோதி | 22 |
| 6. | **இயேசுவின் பிறப்பில் தேம்பாவணி காட்டும் இறைமை**<br>முனைவர் அருட்சகோதரி. இ.அல்போன்சாள் | 28 |
| 7. | **தேம்பாவணியில் இல்லறத் துறவறம்**<br>வே. புளோரா பவுலின் மேரி | 33 |
| 8. | **தேம்பாவணி காட்டும் மாண்பு**<br>முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி | 38 |
| 9. | **தேம்பாவணியில் மரியன்னையின் மாட்சி**<br>ஆ.மெர்சி ஆஞ்சலா | 44 |
| 10. | **தேம்பாவணி - இயற்கையில் இறைக்கொள்கை**<br>செல்வி. க. ஜுலியட் தேவ கிருபை | 48 |
| 11. | **கித்தேரியம்மாள் அம்மானை காட்டும் இறைக்கொள்கை**<br>திருமதி அ.அம்சலேகா | 53 |
| 12. | **தமிழ்க் கிறித்தவ இலக்கியங்களில் இறைக்கொள்கைகள்**<br>சே. சலோமி இராஜரீகம் | 58 |
| 13. | **இலக்கியத்தில் இறைக் கொள்கை**<br>தி. அமிர்தகணேசன் (அகன்) | 63 |
| 14. | **புத்த சமயத்தில் இறைக்கொள்கை**<br>முனைவர் ஞா.பிரான்சிஸ்கேதரின் | 68 |
| 15. | **சிலப்பதிகாரத்தில் இறைமை**<br>முனைவர் தே.ராஜசீலி | 74 |
| 16. | **சிலம்பில் சமண சமய விரதங்கள்**<br>முனைவர் செள. ஜான்சி ராணி | 79 |
| 17. | **சீவக சிந்தாமணியில் -இறைக்கொள்கை**<br>முனைவர் க.சகாய கிரேஸி | 84 |
| 18. | **கம்பராமாயணத்தில் கடவுட் கொள்கை**<br>ம.விமலா | 90 |
| 19. | **காசிக்காண்டத்தில் இறைக்கோட்பாடு**<br>முனைவர் ஆ. ஜீனியராணி | 95 |
| 20. | **திருநாவுக்கரசரின் இறைப்பற்று**<br>கா. சந்திரகலா | 99 |
| 21. | **திருவாசகத்தில் - 'ஒளி'**<br>முனைவர் சி.கௌசல்யா | 104 |
| 22. | **திருவாசகத்தில் மாணிக்கவாசகரின் இறைக் கொள்கை**<br>இரா. நிவேதா | 110 |
| 23. | **திருமந்திரம் காட்டும் இறைமை**<br>ச.பவித்ரா | 115 |
| 24. | **திருமந்திரத்தில் திருமூலரின் இறைமை**<br>பி. சர்மிளா | 120 |
| 25. | **காரைக்கால் அம்மையார் திருக்கோயில் வழிபாட்டு முறைகள்**<br>முனைவர் தி.மே.சா.சந்திரமணி ஜெபராணி | 125 |
| 26. | **காரைக்காலம்மையாரின் பக்தி நெறி : இறைவனிடம் தன்னையளித்தல்**<br>முனைவர் அ.கா.அழகர்சாமி | 131 |
| 27. | **காரைக்கால் அம்மையாரின் இறைக்கொள்கை**<br>அ.கதீஜா | 136 |
| 28. | **பட்டினத்தார் பாடல்களில் இறைமை**<br>திருமதி மு.பவித்ரா நாகபாண்டி | 141 |
| 29. | **வள்ளலாரின் இறைக்கொள்கை**<br>விஜயா | 147 |

## 6.இயேசுவின் பிறப்பில் தேம்பாவணி காட்டும் இறைமை

**முனைவர் அருட்சகோதரி. இ.அல்போன்சாள்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
பெரியகுளம்.

**முன்னுரை :**

அகிலம் படைத்த ஆதி முதல்வன் ஏழை தச்சர் குடும்பத்தில் வறுமையின் பிடியில் வாட்டும் பனியில் ஊருக்கு ஒதுக்குப் புறமான மாட்டையும் கொட்டிலில் பிறந்தார். கடவுள் ஏன் ஏழை குழந்தையாகப் பிறக்க வேண்டும். அவரது பிறப்பின் நோக்கம்,அவரது பிறப்பால் இறைமையின் மணம் இவ்வுலகில் கமழ்ந்த விதம் இவ்வையத்தின் மாந்தர் அனைவரும் இறைவன் என்னும் தாயின் பிள்ளைகள் அத்தகு கரிசனையோடு தாயாகத் தேடும் ஆயனை இக்கட்டுரையில் காண்போம்.

**இயேசுவின் பிறப்பு கூறும் இறைமை:**

இடையர்கள் நாடோடிகள் அவர்கள் பரந்த வெளியில் வாழ்ந்தனர். இடையர்கள் பல காரணங்களால் பொதுமக்களால் வெறுக்கப்பட்டனர். இவர்களுக்கு இயேசுவின் பிறப்பு முதன் முதலாக அறிவிக்கப்படுகிறது. இயேசு பிறப்பின் நோக்கமே எளியோருக்கு நற்செய்தி என்பதை இச்செய்தி அறிவிக்கிறது.

"எண்ணு ளேய டங்க லின்றி யேந்து மாட்சி பூண்டுவான்
விண்ணு ளேபொ லிந்து வந்த விண்ண வர்க்கு வேந்தனே
புண்ணு ளேம ருந்து நீவிப் போன வாட்டை மீட்கவோ
மண்ணு ளேயெ ழுந்து வந்து மண்ண னென்று தித்தனை".
( தேம்.1007)

எண்ணில் அடங்காமல் - உயர்ந்த மாட்சிமைப் பூண்டு சிறந்த விண்ணுலகில் பொலிவுடன் மகிழ்ந்து இருந்த வானவர்க்கு மன்னனே, உன்னை விட்டுப் பிரிந்துபோன ஆட்டை அதன் புண்ணுக்கு மருந்து தடவி மீட்டுக் காக்கவென்றோ இம் மண்ணுலகிற்கு எழுந்து வந்து மனிதனாகப் பிறந்துள்ளாய்?

**தூய உள்ளம்:**

இடையர்கள் எளிமையின் அடையாளங்கள்; தாழ்ச்சியின் வடிவங்கள்; ஆகையால் இயேசுவின் பிறப்பு முதன் முதலில் அவர்களுக்கு





அறிவிக்கப்பட்டது. ஆண்டவரை முதன்முதலில் மண்டியிட்டு வணங்கும் பேறு பெற்றனர். "இவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்கள். நாடோடிகள், கடூரமானவர்கள், குளிக்காதவர்கள், நாற்றமுடையவர்கள் என்று காரணம் கற்பிக்கப்பட்டு தீண்டத்தகாதவர்களாக, சமயச் சடங்குகள் புறக்கணிக்கப்பட்டவர்கள்".(விளக்கின் வெளிச்சம் குடந்தை ஞானி ப: 20) ஆனால் அவர்களுக்குத்தான் இயேசுவின் பிறப்பு விண்ணகத்திலிருந்து அறிவிக்கப்பட்டது. மனிதர்களுக்கு தூரமானவர்கள் கடவுளுக்கு நெருக்கமானவர்கள்.

"ஏத மின்றி மாலி யீன்ற காந்தி யென்று தோன்றலைக்
கோத கன்று யிர்த்த கோதை தாண்மு னன்ன கோவலர்
சீத வின்ப மோடி ரங்கு தேன மிழ்த மீகலும்
*பாத மொன்று சோம னீன்ற பானி லாவை மானுமே"*.(தேம்.1012)

குறை இல்லாமல் கதிரவன் தந்தக் கதிரைப் போல, தன் கன்னிமைக்குப் பழுது இல்லாமல் திருமகனைப் பெற்றெடுத்த மாலை போன்ற மரியாளின் அடிகளில், குளிர்ந்த இன்பத்தோடு இனிய பாலை அவ்விடையர் காணிக்கையாகத் தந்தனர். அது அவள் அடியில் ஒன்றியுள்ள மதி பிறப்பித்த பாலொளியை ஒத்திருக்கும்.

**தந்தை இறைவன் :**

உரிய வரங்களை நீராகப் பாய்ச்சி, அதன் மூலம் விளைந்த பேரின்பத்தைப் பொய் நிறைந்த இவ்வுலகத்தார் உய்வதற்கென்று தந்து உதவுவான்.

"ஏவுகின்ற வயத்துள்ள வுலகுமூன்று
மொழிற்படமுன் னொன்றுமிலா துளவாக் கின்றோன்
மேவுகின்ற திருவுளமாய்ச் சொல்ல லாற்றா
மிடறன்னா லடலையெனப் புழுதி யென்னாத்".(தேம்.1045)

முன் ஒன்றுமே இல்லாதிருக்கையில், தான் ஏவுகின்ற வல்லமை ஒன்றைக் கொண்டே, இப்போது உள்ள உலகங்கள் மூன்றையும் அழகாய் உண்டாக்கிய ஆண்டவன், தான் விரும்புகின்ற திருவுளம் ஒன்றையே கொண்டு, சொல்ல இயலாத தன் ஆற்றலால், சாம்பலாகவும் புழுதியாகவும் முடிவு நாளில் சிதறுகின்ற உடலின் பகுதிகளையெல்லாம் ஒன்றாய்ச் சேர்ப்பதனால், பழமையான இவ்வுலகம் பரந்து கிடக்கின்ற மனித இனத்தார் யாவரும், ஒருவனும் விலக்கின்றி, தம் உடலை அணிந்து உயிரோடு எழுந்து திரண்டு நிற்பர்.

நற்செய்தியாளர்கள் லூக்கா, மத்தேயு இருவரும் இயேசு உணர்த்துவதாக குறிப்பிடுவதிலிருந்து இயற்கைக்கு அப்பாற்பட்ட கருவிகளைக் கடவுள் பிறப்பின் நிகழ்வுகளை விவரிக்கின்றனர். குழந்தை இயேசு பெத்தலகேமில் பிறந்தது.உடனே, அந்த மாபெரும் நற்செய்தியினை உலகிற்கு அளிக்கப்படுவதை லூக்காவும், ஞானிகள் அறிவதை, மத்தேயுவும் எழுதுகின்றனர். இடையர்களுக்கு வானதூதரும், ஞானிகளுக்கு விண்மீன்களும்,இந் நற்செய்தியில் பயன்படுத்தியிருக்கின்றார் என்பதில் கடவுளின் மீட்புத் திட்டத்தில் இறைமை நிறைபெறுவதை அறியமுடிகின்றது.

**தாயன்பு:**

தன்னையே கொடுத்தல் தாயன்பு. நிபந்தனையில்லா , மன்னிக்கும் இறையன்பை இயேசு மெய்ப்பிக்கிறார்.

"அமுதார்ந்த துயர்க்கரத்திற் பிறந்து கைக்கு
மரந்தையின்பா லருந்திவளர்ந் தருள்வ ளர்த்த
பொழுதார்ந்த வஞ்சகத்தார் பகைசெய் தார்ப்பப்" .(தேம்.1039)

மாணிக்கக்கலத்தின் உள்ளே அமுதத்தைத் தாங்கி நிற்பது போன்று அருள் நிறைந்த நெஞ்சங் கொண்ட ஆண்டவன், அமுதவண்ணமாய், நிறைந்த துன்பத்தின் கையிலே பிறந்து, கசப்பான துயரமென்னும் பால் அருந்தி வளர்ந்து, எங்கும் அருளை வளர்த்துக் கொண்டிருக்கும் காலத்தில், நிறைந்த வஞ்சகம் கொண்டோர் தன்மீது பகை கொண்டு எதிர்த்து முழங்க, தானோ பொறுமையை ஏராகப் பூட்டி தன் உதிரத்தை நீராகச் சொரிந்து சேற்றுபட உழுது நிறைந்த தயவை விதையாக விதைத்து தன்னுயிரீந்து வானகத்தை பேருவகையுடன் தருவான்.

**மக்கள் குலமெல்லாம் ஒன்றே:**

நன்மை தீமை எனும் இரண்டு மட்டுமே மக்களை வேறுபடுத்துகிறது . வாழ்வின் நிறைவு இறையின் கரங்களில். உரிய வரங்களை நீராகப் பாய்ச்சி வாழ்வாங்கு வாழ இறையன்பு நமைத் தொடர்கிறது.

"வானகத்தே பேருவகை பயக்கும் பாலால்
வடிவமுகத் திவனல்லோர் தம்மை நோக்கி
கானகத்தே துயருண்டிர் நிந்தை யுண்டிர்
கசடற்றீ றறம்பூண்டி ரினியெஞ் ஞான்றும்." .(தேம்.1055)

வானுலகத்தில் பெருமகிழ்ச்சி ஊட்டும் தன்மையான அழகிய வடிவமுள்ள முகத்தோடு விளங்கும் இக்குழந்தைநாதன். அவ்விறுதித் தீர்ப்பு நாளில்,





நல்லோரை நோக்கி, பெரிய மண்ணுலகில் என் தந்தையாகிய கடவுளின் ஆசி பெற்றோரே, அந்நாளில் காட்டில் சென்று தவம் செய்து துயரம் அடைந்தீர். நிந்தையினை அனுபவித்தீர். பாவம் அற்று வாழ்ந்தீர். அறத்தைக் கைக்கொண்டு ஒழுகினீர். இனி, விண்மீன்களிடையே விண்மீன்கள் போல் எக்காலமும் ஒளியுடன் விளங்கி.ஒப்பற்ற வான் வீட்டில் என்னோடு வீற்றிருந்து அரசாள வாருங்கள்! என்று கூறவே. நல்லோரெல்லாம் வரமென்னும் கடலில் மூழ்கிய மகிழ்ச்சியோடு உரிய வரங்களை நீராகப் பாய்ச்சி, அதன் மூலம் விளைந்த பேரின்பத்தைப் பொய்நிறைந்த இவ்வுலகத்தார் உய்வதற்கென்று தந்து. உதவுவான்.

**ஞானிகள்:**

விண்மீனை கண்டு ஞானிகள் இயேசுவை காண வழி கண்டனர். காணிக்கை இட்டனர்.

"பெரும் தலைவர்களின் பிறப்போடு அல்லது நாட்டில் நடைபெறும் முக்கியமான நிகழ்ச்சியோடு விண்மீன்களைப் பொருத்திக் கூறுவது அன்றைய மரபாக இருந்தது. இங்கு 'அவருடைய விண்மீன்'என்பதை 'இயேசுவின் ஒளி' என பொருள் கொள்வாரும் உண்டு. இயேசு யூதரல்லாத புறவினத்தாருக்கும் இருளகற்றும் ஒளி"(மத் விளக்: தியாகு ப :42) பழைய ஏற்பாட்டில் மேகத்தூண் இஸ்ரயேலை வழிநடத்தியது. புதிய ஏற்பாட்டில் இயேசுவின் ஒளி பிறஇனத்தாரான ஞானிகளை வழி நடத்துகின்றது.

"ஓராழி யுருட்டலின்மூ வுலகாளுந் தனிமன்னற் குரிய மாடை
நீராழி நிலங்காக்க மாள்வனெனு மதற்குரிய நெய்கொள் மீறை
பாராழி யறத்திறைவற் கருச்சனைசெய் வதற்குரிய வரிய தூபம்
பாராழி யுடைமூவர். இம்மூன்றும் பதமலர்முன் பணிந்து
வைத்தார்". (தேம்.1055)

தன் ஒரே ஆணைச் சக்கரத்தை எங்கும் செலுத்துதலினால் மூன்று உலகங்களையும் ஆளும் ஒப்பற்ற மன்னன் என்பதைக் காட்டுவதற்கு உரிய பொன். நீரால் ஆகிய கடல் சூழ்ந்த இவ்வுலகத்தைப் வையத்தினின்று மீட்டுக் காக்க மனிதனாக மடிவான் என்னும் அதனைக் காட்டுவதற்கு உரிய மண நெய்யாகிய மீறை, நிறைந்த அறமென்னும் சக்கரத்தைக் கொண்டுள்ள கடவுள் என்று காட்டுவதற்கு, வழிபாடு செய்வதற்கு உரிய தூபம் இம்மூன்றையும் உலகத்தை ஆளும் ஆணைச் சக்கரத்தைக் கொண்டுள்ள அம்மூவரும் அக்குழந்தை நாதனின் திருவடி மலர்முன் பணிவோடு காணிக்கையாக இட்டனர். மாடை-பொன். 'மீறை'

என்பது இறந்தவர் உடலிற் பூசி அடக்கம் செய்வதற்கு உரிய நறுமணத் தைலம். பொன்னால் அரசனும், மீறையால் மனிதனும் தூபத்தால் கடவுளும் என்று இறைமகன் இயேசுவின் இறைமைத் தன்மை வெளிப்படுத்தப்படுகின்றது.

பிறப்பிலேயே ஏழ்மை எனும் சிலுவை, ஊருக்குப் புறம்பே ஒதுக்கப்பட்ட நிலை முள்முடி, கசையடி எனும் துன்பங்களை இறைமகன் இயேசு தாழ்மையோடு ஏற்றுக் கொண்டார். அவரது இறைத்தன்மை வாழ்வில் இழையோடு வாழ்ந்திருப்பதை அறியமுடிகிறது.

**நிறைவாக :**

இயேசு அரசர் என்பதைப் பொன்னும், கடவுள் என்பதைத் தூபமும், துன்புறுபவர் என்பதை வெள்ளைப் போளமும் குறிப்பதாக 2-ம் நூற்றாண்டில் வாழ்ந்த இரனேயுஸ் கூறுகின்றார். "மாற்கு இயேசுவை கிறிஸ்து என்று அழைப்பதன் மூலம் இவர்தான் இஸ்ரேயலர், எதிர்பார்த்திருந்த மீட்பர், மரித்துயிர்த்த ஆண்டவர் எனச் சுட்டிக்காட்டுகின்றார். யூதர்களை மட்டுமன்று, மனுக்குலம் அனைத்தையும் மீட்பவர்; போரால் அன்று, தம் மரணத்தால் மீட்பவர்; அந்நிய ஆட்சியினின்று பாவத்தின் கொடும் பிடியினின்று மீட்பவர் இயேசு."(மாற் விளக் ப :25) இயேசுவின் மானிட உடலே இறைமகன் மனித வடிவெடுத்து "பாவம் தவிர பிற அனைத்திலும் நம்மையொத்த மனிதப் பிறவியானார்" என்பதேயாகும்.(யோவான் 1;14) "உன்னதங்களில் இறைவனுக்கு மகிமை" உலகில் நன்மனதுள்ளவர்களுக்கு அமைதி மெசியாவாகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் இறைவன் உன்னதத்திலே மகிமை, மாட்சிமை பெறுகிறார். உலகிலே அவரால் அன்பு செய்யப்படுபவர்கள். மெசியா கொண்டு வந்த அமைதியை ஆசீராகப் பெறுகின்றனர். மக்கள் குலமெல்லாம் ஒன்றென வாழ்வால் எண்பித்தார் என்பதிலிருந்து இயேசுவின் பிறப்பில் ஆசிரியர் வீரமாமுனிவர் தேம்பாவணி வழி இறைமைத்தன்மையை அழகுற சித்திரித்துள்ளதை இக்கட்டுரை வழி அறியமுடிகின்றது.





## 7. தேம்பாவணியில் இல்லறத் துறவறம்

**வே. புளோரா பவுலின் மேரி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி,
பெரியகுளம்.

**முன்னுரை:**

தேம்பாவணி கிறித்தவ சமயத்தைச் சார்ந்த ஒரு காப்பிய நூல். இயேசுநாதரின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரின் வரலாற்றைக் கூறுவது. கத்தோலிக்கத் திருச்சபையின் கொள்கைகள் மற்றும் அறிவுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. எனவே இந்நூல் கிறித்தவர்களின் கலைக்களஞ்சியம் என வழங்கப்படுகிறது. இத்தனை சிறப்புடைய தேம்பாவணிக் காப்பியத்தில் சூசை மரியின் இல்வாழ்க்கையில் துறவறத்தை என்ன மனநிலையில் எவ்வாறு கடைபிடித்தனர் என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**வீரமாமுனிவர் பிறப்பும் ஆற்றிய பணியும்:**

இத்தாலி நாட்டில் 'காஸ்திலியோனே' என்னும் சிற்றூரில் 1680 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 -ஆம் நாளில் பிறந்தார். இவரது பெற்றோர் 'கான் கொண்டல் போ பெஸ்கி', 'எலிசபெத் அம்மையார்' ஆவர். இவரது இயற்பெயர் 'கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி' என்பதாகும். தமிழ் மீது கொண்ட தீராக் காதலால் 'வீரமாமுனிவர்' என்ற பெயர் மாற்றம் செய்து கொண்டார்.

திருக்காவலூர்க்கலம்பகம், அடைக்கல மாலை, வெண்கலிப்பா, கித்தேரியம்மாள் அம்மானை, அன்னை அழுங்கல் அந்தாதி ஆகியவற்றைப் படைத்தார். மரியாளை 'அடைக்கல மாதா' என்று வழிபட்டு அன்னைக்குத் திருக்காவலூரில் கோயிலும் எழுப்பினார்.

வீரமாமுனிவருக்கு முன் தமிழில் அகராதி இல்லை. அகராதி என்ற பெயரே வீரமாமுனிவர் ஏற்படுத்தியது தான்.

1. சதுரகராதி,
2. தமிழ் இலத்தீன் அகராதி,
3. போர்த்துக்கீசியம் இலத்தின் தமிழ் அகராதி,
4. தமிழ் பிரெஞ்சு அகராதி,
5. பிரெஞ்சு தமிழ் அகராதி,